# நீங்கள் இருக்க விரும்பாத இடத்தில் நீங்கள் இருக்கக் காணும்பொழுது (28:1–11)

*பவுலின் ரோமாபுரிப் பயணத்தை வாழ்க்கைக் கடலில் நமது பயணத்துடன் நாம் ஒப்பிட்டுப் பார்த்தோம். குறைந்தது இன்னும் ஒரு இணை நிகழ்வாவது பெறப்படலாம்: பவுலைப் போலவே நாமும் எதிர்பார்க்கும் இடத்தில் எப்பொழுதும் நாம் இருக்கக் காண்பதில்லை.*

*பவுலின் ரோமாபுரிப் பயணம் பற்றிய நில வரைபடத்தை ஒரு கணம் பாருங்கள். (பயணம் தொடங்கிய இடமான) செசரியாவில் இருந்து (பயணம் முடியும் இடமான) ரோமா புரிக்கு உங்கள் மனதில் ஒரு நேரான கற்பனைக் கோட்டை வரையுங்கள். இப்பொழுது அந்தக் கோட்டை அவரது கப்பல்கள் உண்மையில் பயணம் செய்த பாதையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்: வடக்கு, கரைவரைக்கும்; மேற்கு, இப்பொழுது துருக்கி எனப்படும் இடத்திற்கு நெருக்கமாக; தெற்கு, கிரேத்தா தீவு வரை மற்றும் நல்ல துறைமுகத்திற்கு மேற்கு வரையிலும்; கடைசியில், தெற்கு, பிறகு மேற்கு (வடக்கு மற்றும் கிழக்கு ஆகியவை சற்று இதில் கலந்திருக் கின்றன), கப்பலானது மெலித்தாத் தீவின் கரையில் ஒதுங்கும் வரையில் முன்னும் பின்னுமாக “அலைவு பட்டது” (அப். 27:27;* ASV*). கணிசமான அளவு தாமதம் மற்றும் வழிமாற்றம் ஆகியவைகளுக்குப் பின்பு தான் பயணிகள் ரோமாபுரி நோக்கி வடக்கு முகமாகப் பயணப்பட்டார்கள்.*

*நம்மில் பலருக்கு வாழ்க்கை இவ்விதமாகவே இருக்கின்றது. சில மக்களின் வாழ்க்கையானது அவர்களின் வாழ்க்கை நோக்கங்களில் இருந்து தொடங்கி, அந்த இலக்குகளை அடைவதில் தவறின்றி முன்னேறும் நேர்க் கோடுகளாக வரையப்படலாம். மற்றவர்களின் வாழ்க்கையோ எதிர்பாராத சுழற்சிகளும், திருப்பங்களும் கொண்டவைகளாய் இருக்கின்றன. எனது நண்பர் ஒருவர் அவரது துணைவரின் மரணத்தால் வாழ்க்கையில் போராடிக் கொண்டிருக்கின்றார்; அப்பெண்மணி அவரையே சார்ந்திருந்தார், அவர் இப்பொழுது இல்லாமல் போய் விட்டதால் சமாளிப்பது மிகவும் கடினமாய் உள்ளது. இன்னொரு நண்பர் சமீபத்தில், "நான் இந்த வயதில் எனது பேரக் குழந்தைகளைத் தொட்டிலில் போட்டு ஆட்டிக் கொண்டிருப்பேன் என்று நினைத்திருந்தேன் - ஆனால் நான் இங்கு என்னையே பராமரித்துக் கொள்வதற்கு வேலை செய்து கொண்டிருக்கின்றேன்!" என்று எழுதினார். நீங்கள் இருக்க விரும்பாத இடத்தில் நீங்கள் இருக்கக் காணும் பொழுது, அதைப் பற்றி நீங்கள் என்ன செய்ய வேண்டும்? நீங்கள் என்ன செய்ய முடியும்?*

*பவுல் மெலித்தாத் தீவில் தாம் இருக்கக் கண்ட பொழுது, அவர் தாம் விரும்பிய இடத்தில் இருக்கவில்லை. அவர் ரோமாபுரியில் இருக்கவே விரும்பினார் (19:21). எருசலேமில் அவர் கைது செய்யப்பட்ட பிறகு அவர் ரோமாவில் சாட்சி கொடுப்பார் என்று கர்த்தர் அவருக்கு உறுதி கூறியிருந்தார் (23:11). அந்த அப்போஸ்தலர் இராயருக்கு அபயமிட்டு ரோமாபுரியை நோக்கிப் பயணம் தொடங்கியிருந்தார். அவர் இராயருக்கு முன்பாக நிற்பார் (27:24) என்று பயணத்தில் தேவன் அவருக்கு வாக்குத்தத்தம் செய்திருந்தார். தலைநகரில் இருப்பதாக எதிர்பார்க்கும் ஒவ்வொரு உரிமையையும் பவுல் பெற்றிருந்தார். அதற்குப் பதிலாக, அவர் ரோமாபுரியில் இருந்து பல மைல்கள் தூரத்தில் இருந்த சின்னஞ்சிறு தீவு ஒன்றில் தாம் இருக்கக் கண்டார், மழை காலம் வந்தது, வசந்த காலம் வரைக்கும் அத்தீவை விட்டுச் செல்லக்கூடிய சாத்தியம் இல்லாதிருந்தது.*

*பவுல் தாம் இருக்க விரும்பாத இடத்தில் இருந்ததாகக் கண்ட பொழுது என்ன செய்தார்? நம்மில் சிலரைப் போல அவர் முறையிட்டுச் சலித்துக் கொண்டாரா? சுயமைய*

முடையவராகி கசப்புடைய மனிதரானாரா? பரிதாபத்திற் குரியவராகி தம்மைச் சுற்றிலும் இருந்தவர்களையும் பரிதாபத்திற்குரியவர்களாக்கினாரா? பவுல் தமது சூழ்நிலைக்கு எவ்விதம் பதில்செயல் செய்தார் என்று நாம் காண்போம்.

இந்தப் பாடத்தைச் செயல்முறைக்கு உரியதாக்குவதற்கு, ஞானமும், தேவபக்தியும் உள்ள எனது பாட்டி எனக்குக் கூறும் ஆலோசனை மற்றும் அறிவுரைகளைக் கண்டறிந்துள்ளேன்.[1] பாட்டி ரோப்பர் அவர்களை நான் உங்களுக்கு அறிமுகப் படுத்துகின்றேன்: அவர்கள் ஏறக்குறைய உங்கள் பாட்டியைப் போலவே காணப்படுவார்கள்; அவர்களின் முகத்தில் சில சுருக்கங்கள் இருந்தாலும், அவர்களின் கண்கள் பிரகாசமுடை யவைகளாய் இருக்கும். துன்பத்தை அவர்கள் அநுபவித் திருந்தாலும், வாழ்க்கையில் துவண்டு போனதில்லை. அவர்கள் கர்த்தரை நேசிக்கின்றார்கள், என்னையும் நேசிக்கின்றார்கள். என்னைப் பற்றிக் கவலைப்படும் பொழுது, அவர்களின் கண்கள் ஒளி பெற்று, எனது ஆத்துமாவுக்குள் பார்ப்பது போல ஊடுருவிக் காணும். நான் இளைஞனாய் இருந்த போது, அவர்களின் அறிவுரையின் மேல் எப்பொழுதுமே ஈடுபாடு கொண்டதில்லை, ஆனால் அவர்கள் பேசும் பொழுது கவனிக்கும்படியாகக் காலம் எனக்குப் போதித்துள்ளது. நமது முந்திய பாடம் முடிவடைந்த இடத்திலிருந்து நமது எடுத்துரைப்பு தொடங்குகின்றது.

## "அது மிக மோசமாயிருக்கக் கூடும்" *(28:1)*

*பவுல் கடற்கரையில் சக்தியற்று விழுந்து, சுவாசத்திற்காய்ப் பெருமூச்சு விட்டுக் கொண்டு இருக்கையில், நீரால் சூழப்பட்டு உயிர் பிழைத்தவர்கள் கரையேறப் போராடிக் கொண்டிருந் தார்கள். 276 பேரும் தண்ணீரில் ஊறிப் போய், பசியுடன் நடுங்கிக் கொண்டு, கடலில் இருந்து வீசியெறியப்பட்ட மனிதக் குப்பைகள் போல் காணப்பட்டார்கள். அவர்கள் தங்களின் கப்பலை ஆவேசமான கடல் அழித்துக் கொண்டிருப் பதைக் கவனிக்கத் திரும்பினார்கள்.[2]*

அவர்களின் சிந்தனை என்னவாயிருந்ததென்று நீங்கள்

யூகிக்கின்றீர்கள்? கப்பலும், அதின் சரக்கும் தொலைந்து போனதால், கப்பலின் முதலாளியுடைய கண்களில் கண்ணீர் நிறைந்திருக்கும், ஆனால் அவர்களில் - பவுல் உட்பட - அநேகர் தாங்கள் உயிருடன் இருப்பதற்காக நன்றி நிறைந்தவர்களாய் இருந்தார்கள் என்று நான் கற்பனை செய்கின்றேன்!

“நாங்கள் தப்பிக் கரை சேர்ந்த பின்பு, அந்தத் தீவின் பேர் மெலித்தா என்று அறிந்தோம்” (வ. 1) என்று லூக்கா பதிவு செய்துள்ளார். மெலித்தா என்பது பதினெட்டு மைல்கள் நீளமும் எட்டு மைல்கள் அகலமும் கொண்ட கரடுமுரடான ஒரு சிறு தீவு ஆகும். இது மத்திய தரைக் கடலில் இத்தாலிக்கும், வடக்கு ஆப்பிரிக்காவுக்கும் நடுவில் சிசிலியில் இருந்து தெற்கே ஐம்பத்தியெட்டு மைல்கள் தூரத்தில் இருந்தது. பெனிக்கேயின் வியாபாரிகள் அங்கு குடியேறியிருந்தார்கள், ஆனால் கி.மு. 218ல் அது ரோமர்களின் ஆட்சியின் கீழ் வந்தது. கானானிய மொழியில் “மெலித்தா” என்றால் “புகலிடம்” என்று அர்த்தப் படும்; பெனிக்கியக் கடற்பயணிகள் அத்தீவில் புகலிடம் பெற்றதால் ஒருவேளை அப்பெயர் தரப்பட்டிருக்கலாம். இப்பொழுது அந்தத் தீவானது பவுலுக்கும் அவருடைய உடன் பயணிகளுக்கும் புகலிடம் கொடுத்தது.

நான் இக்காட்சியைக் காணுகையில், எனக்கருகில் பாட்டி ரோப்பர் அவர்கள் குளிருக்கு எதிராகத் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளத் தம் தோள்களைச் சுற்றி ஒரு சால்வையுடன் நிற்கக் கண்டேன். அவர்கள் என்னிடத்தில், “குளிரினால் நடுங்கும் அந்த அகதிகளைப் பார் டேவிட், அத்துடன் இதை நினைவில் வைத்துக் கொள்: எது நடந்தாலும், அது இன்னும் அதிக மோசமாய் ஆகியிருக்கக் கூடும். பவுலும் மற்றவர்களும் குளிர்ந்து, நனைந்து, களைப்பாய் இருந்தார்கள் - ஆனால் அவர்கள் இறந்து போயிருக்கக் கூடும்!” நான் தன்னம்பிக்கைக் குறைவானவனாகக் காணப்பட்டதால், இது எனக்குத் தேவை என்பதைப் பாட்டி அறிந்திருக்கின்றார்கள்.

உண்மையிலேயே நாம் விரும்பாத ஒரு இடத்தில் நாம் இருக்கக் காணும் பொழுது, நமது எண்ணப்போக்கு பற்றி நாம் செயல்பட வேண்டியது தேவை. “நீங்கள் எப்பொழுதும் உங்கள் உறைவிடத்தைத் தேர்ந்து கொள்ள முடியாது. ஆனால் உங்கள் எண்ணப் போக்கைத் தேர்ந்து கொள்ள முடியும்.”[3]

# “ஒளியுள்ள பக்கமாய் நோக்குங்கள்” (28:2)

*மெலித்தாவின் மழையினால் கழுவப்பட்ட கடற்கரையைச் சுற்றிலும் நாங்கள் பார்க்கையில், கப்பற் சேதத்தில் பாதிக்கப் பட்டவர்கள் தனிமையாய் இல்லை என்பதைக் காணுகின் றோம். தீவில் இருந்த யாரோ ஒருவர் கரையருகில் நின்ற கப்பலைக் கண்டு வார்த்தையைப் பரவச் செய்தார் என்பது உறுதி. நீந்திக் கொண்டோ அல்லது மிதந்து கொண்டோ கரைக்கு வந்தவர்கள் வரவேற்புக் குழு ஒன்றினால் சந்திக்கப் பட்டார்கள்.*

*லூக்கா, “அந்நியராகிய அந்தத் தீவார் எங்களுக்குப் பாராட்டின அன்பு கொஞ்சமல்ல. அந்த வேளையிலே பிடித் திருந்த மழைக்காகவும், குளிருக்காகவும் அவர்கள் நெருப்பை மூட்டி, எங்கள் அனைவரையும் சேர்த்துக் கொண்டார்கள்” (வ. 2) என்று எழுதினார். அது அக்டோபர் மாதத்தின் பின்பகுதி யாகவோ அல்லது நவம்பர் மாதத்தின் முன்பகுதியாகவோ இருந்தது. மத்திய தரைக்கடலின் அந்தப் பகுதியில் அப்பொழுது ஏறக்குறைய 50°F (10°C) வெப்பநிலைதான் இருந்தது - நனைந்து, பலம் இழந்து, கொட்டும் மழையில் நிற்பவர்களைக் குளிரச் செய்ய அது போதுமானதாக இருந்தது. “தண்ணீரால் சூழப்பட்டு, காற்றில் செலுத்தப்பட்ட நீர்ச் சுழலில் (roller coaster[4]) இரு வாரங்கள் அகப்பட்டுக் கிடந்து, அப்பொழுதுதான் தப்பி வந்திருந்த அவர்களுக்கு அந்த நெருப்பின் கதகதப்பு உணர்வுப் பூர்வமாகவும், உடல் ரீதியாகவும் - எவ்வளவு இதமாய் இருந்திருக்கும்!”[5]*

*அந்தத் தீவாரின் அன்பு “கொஞ்சமல்ல” ஏனென்றால், நிலத்தால் சூழப்பட்ட கொள்ளையர்கள் கப்பற் சேதங்களுக் காகக் காத்திருந்து பிறகு அதில் பாதிக்கப்பட்டவர்கள் மேல் பாய்வதுண்டு: சில வேளைகளில் அவர்களைக் கொள்ளை யர்கள் கொன்று விடுவதுண்டு; சில வேளைகளில் அவர்களை கொள்ளையர்கள் அடிமைகளாக்கிக் கொள்வதுண்டு; எப்பொழுதும் அவர்களிடத்தில் இருப்பவற்றை கொள்ளையர் கள் அபகரித்துக் கொண்டு, அழிந்து போன கப்பலில் இருந்தும் சரக்குகளைத் திருடுவதுண்டு. மெலித்தா தீவைச் சேர்ந்தவர் களால் இவ்வளவு உபசரிப்புடன் நடத்தப்பட்டது இம்மனிதர்*

களுக்கு எவ்வளவு ஒரு இனிய அதிர்ச்சியாக இருந்திருக்கும்!

"தீவார்" (natives) என்ற சொற்றொடர் பற்றி ஒரு வார்த்தை கூறப்பட வேண்டியது அவசியம். KJVயில் "barbarians" [காட்டு மிராண்டிகள்] என்றுள்ளதால் (வ. 4; வ. 2ஐயும் காணவும்), அந்தக் கப்பலை வரவேற்றவர்களை நான் ஒருமுறை நட்புற வான காட்டு மனிதர்களின் கூட்டம் என்று சித்தரித்தேன். இவ்விடத்தில் KJVயில் மிகச் சரியான மொழிபெயர்ப்பு உள்ளது, ஏனென்றால் கிரேக்க வசனத்தில் Barbaroi என்றுள்ளது - ஆனால் இன்றைய நாட்களில் "barbarians" என்ற வார்த்தை தவறான கருத்தை ஏற்படுத்துவதாக இருக்கின்றது. "கிரேக்கர் களைப் பொறுத்தமட்டில், "barbarian" என்றால் அழகிய கிரேக்க மொழியில் பேசாமல், மதியற்ற அந்நிய மொழிகளில் அதாவது *bar-bar* என்று பேசும் ஒரு மனிதர் என்று அர்த்தமாகும்."[6] லூக்காவின் நாட்களில் "barbarian" என்ற வார்த்தையானது, இன்றைய நாட்களில் போல கலாச்சாரமில்லாத கரடுமுரடான அல்லது உலகியலுக்கு ஏற்புடையதல்லாத என்று அர்த்தப்பட வில்லை; அது, அந்தத் தனிநபர் தமது சொந்த மொழியைப் பேசுவதைத் தேர்ந்து கொண்டவர் என்று மட்டுமே அர்த்தப் படுத்தியது. உண்மையில், ரோம மாகாணமான சிசிலியின் ஒரு பாகமாய் இருந்த மெலித்தா உயர்ந்த நாகரிகம் உடையதாய் இருந்தது. "பவுலின் நாட்களில், இத்தீவானது இதன் வளமைக் கும் மற்றும் உள்ளூர்க் கட்டிடக் கலைக்கும் பெயர் பெற்று அறியப்பட்டதாய் இருந்தது."[7] NIVயில் கூறப்படும் (தமிழிலும் இது போலவே உள்ளது) "தீவார்" என்ற இயற்பெயரானது, பவுலையும் அவரது உடன் பயணிகளையும் அன்புடன் ஏற்றுக் கொண்டவர்களுக்கு நல்லதொரு விளக்கப் பெயராகும்.

நட்புறவு மற்றும் அக்கறை மிக்க அந்தத் தீவாருடன் நான் ஆகாயம் உயர்ந்து காணப்பட்ட கனத்த நெருப்பினருகில் நின்று கொண்டிருக்கின்றேன். அந்த நெருப்பானது ஊறிப் போய் உயிர் பிழைத்த (ஏறக்குறைய) முந்நூறு பேர்களை உலர வைக்கப் போதுமானதாக இருந்தது. கப்பலில் இருந்தபோது அவர்கள் உலர்ந்தோ அல்லது வெதுவெதுப்பாகவோ இருந்து பல நாட்கள் ஆகியிருந்தது.

பாட்டி ரோப்பர் அவர்கள் என் விலாவில் இடிப்பதை நான் உணருகின்றேன். நான் அவர்களை கவனித்தபோது, அவர்கள் "நான் எனது கடைசி ஆலோசனையைக் கூறுகின்றேன்:

*இடர்ப்பாடு வருகின்றபோது அது இன்னமும் மோசமாய் இருந்திருக்கக்கூடும் என்பதும், அதை நீ கடினமாய் கவனித் தால் அச்சூழ்நிலையில் நல்லவை சிலவற்றைக் காணமுடியும் என்பதும் கூட உண்மையாகும்'' என்று கூறுகின்றார்கள். சுவாலையின் அருகில் தம் கைகளை வைத்தபடியே அவர்கள் புன்முறுவல் பூத்துக் கொண்டே, "எடுத்துக்காட்டாக, இந்த நெருப்பு நன்மையானது என்றே உணருவதாக நீ ஒத்துக் கொள்ள வேண்டும்" என்று கூறுகின்றார்கள்.*

*மறுபடியும் பாட்டியவர்கள் எனது இயற்பண்பின் பலவீன மானதொரு பகுதியைத் தொட்டிருக்கின்றார்கள், நான் சூழ் நிலைகளின் ஒளியுள்ள பக்கத்தை நோக்குவதற்குப் பதிலாக இருளுள்ள பக்கத்தை நோக்குவதற்கே சாய்ந்திருக்கின்றேன். எனது வாழ்க்கையில் அறைகூவல்கள் வரும்பொழுது, அவை களை வாய்ப்புக்கள் என்று காண்பதற்கு மாறாக பிரச்சனைகள் என்றே நான் அவைகளைக் கண்டிருக்கின்றேன். (ஒருமுறை எனது உடன் ஊழியர் ஒருவர் என்னிடத்தில், "நேர்மறையாக நினைத்துப் பாருங்கள் டேவிட்'' என்று கூறினார்; அதற்கு நான், ''நான் அப்படியாகவே இருக்கின்றேன், இந்தத் துணிகரமான முயற்சியானது பேரழிவுக்கு இட்டுச் செல்லுகிறது என்பதில் நான் நேர்மறையான எண்ண முள்ளவனாகவே இருக்கின்றேன்" என்று பதில் கூறினேன்.)*

## "உள்ளதைக் கொண்டு நல்லது செய்யுங்கள்" *(28:3)*

*பாட்டியாரின் அறிவுரையைப் பற்றி நான் நினைக்கையில், மக்கள் காட்டுக்குள் ஓடி விறகுகளைப் பொறுக்கி வந்து அவைகளைத் தீயில் வாரிப் போட்டதைக் கவனிக்கின்றேன். வெளிப்புறத்தில் விறகு வைத்து எரியும் நெருப்புக்கு எரி பொருள் தொடர்ந்து தர வேண்டும், இல்லாவிட்டால் அது சீக்கிரமாய் தானே அணைந்து போகும். பாட்டி ரோப்பர் எனது விலாவில் இடித்து (எனது விலா எலும்புகள் புண்ணாகி விட்டன) விறகு பொறுக்குகின்றவர்களில் ஒரு நபரைச் சுட்டிக் காட்டுகின்றார்கள்: அவர்தான் அப்போஸ்தலர் பவுல்!*

*''பவுல் சில விறகுகளை வாரி அந்த நெருப்பின்மேல்*

போடுகையில் ...” (வ. 3அ). வில்லியம் பார்க்ளே அவர்கள், “ஒன்றும் செய்யாமல் இருக்க முடியாத மனிதராகப் பவுல் விளங்கினார்; சொக்கப்பனை ஒன்று கொளுத்தப்பட்டிருந்தது, பவுல் அதைத் தூண்டும் விறகுகளைச் சேகரித்துக் கொண்டிருந்தார்” என்று கூறினார். J. W. மெக்கார்வி அவர்கள், “நவீனப் பாதிரியார் போன்ற பாணியில் பவுல் ஊழியராய் இருந்ததில்லை. இந்தப் பாதிரியார்கள் கடின உழைப்பினால் தங்களின் கைகளில் அழுக்குப் படியாமல் இருப்பதில் கவனமாய் இருக்கின்றார்கள் மற்றும் ஒவ்வொருவரும் தங்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்து, தமது கௌரவத்தைப் பாதுகாத்து நடந்து கொள்கின்றார்கள்” என்று கூறினார். இந்த அப்போஸ்தலர் தமது வாழ் நாள் முழுவதும் தம் கைகளால் உழைத்தார் (20:34); விறகு பொறுக்குவதற்கு அவர் தேர்ந்தவராய் இருந்ததில்லை. “கிறிஸ்துவின் சிந்தை கொண்ட (பிலி. 2:1-13) தேவனுடைய ஊழியக்காரருக்கு, எந்த ஒரு பணியும் மிகச் சிறியதே அல்ல,” என்று வாரன் வயர்ஸப் கூறினார்.

பாட்டியார் எனது காதுகளில் “இதிலிருந்து நீ என்ன கற்றுக் கொள்கின்றாய்?” என்று இரகசியமாய்க் கேட்கின்றார்கள். நான் சற்று சிந்தித்து விட்டுப் பிறகு, “சிறு சிறு வேலைகளைச் செய்வது என்பது மிக நல்லதல்லவா?” என்று பதில் அளிக்கின்றேன். “பாட்டியார் புன்னகைத்து, அது சரியானதே, ஆனால் நீ இருக்க விரும்பாத இடத்தில் இருக்கும் பிரச்சனைக்கு இதை நீ நடைமுறைப்படுத்த நான் விரும்புகின்றேன். பவுல் ஒன்றும் செய்யாமல் உட்கார்ந்து கொண்டு, சூழ்நிலையில் முன்னேற்றம் ஏற்படட்டும் என்று காத்துக் கொண்டிருந்தாரா? அல்லது சூழ்நிலைகளைச் சிறப்பானதாக்குவதற்காக அவர் தம்மால் முடிந்தவைகளைச் செய்து கொண்டிருந்தாரா?” என்று கேட்டார்கள்.

நான் பதில் தரக் கவலைப்படவில்லை, ஏனெனில் பதில் மிகத் தெளிவானதாயிருக்கின்றது - எனது சொந்த வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துதல் என்பதாகவே அது இருக்கின்றது. சில வேளைகளில் நான் ஒரு சூழ்நிலையை முன்னேற்றுவதற்கு என்னால் முடிந்தவற்றில் சிறந்தவற்றைச் செய்வதற்குப் பதிலாக, அதைப் பற்றி முறுமுறுத்துக்கொண்டு மட்டும் இருந்திருக்கின்றேன். நான் கருத்தைப் பற்றிக் கொள்வதைப்

*பாட்டி உறுதிப்படுத்திக் கொள்கின்றார். ஏனெனில் அவர் எனது காதுகளில், "இருளைப் பழிப்பதற்குப் பதிலாக ஒரு மெழுவர்த்தியை ஏற்றி வைப்பது நல்லது என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார்'' என்று இரகசியமாய் கூறினார்கள். நான் தலையசைக்கின்றேன்.*

## "மனமுடைந்து போய் விடாதீர்கள்" *(28:3-6)*

*திடீரென்று நடந்த ஒரு அதிர்ச்சியான நிகழ்ச்சியினால் எங்கள் உரையாடல் தடைப்படுகின்றது. எல்லாருடைய கண்களும் பயத்துடன் அப்போஸ்தலரை நோக்குகின்றன. அவரது கையில் ஒரு விரியன் பாம்பு ஒட்டிக் கொண்டு இருக்கின்றது (வ. 3).*

குளிரின் காரணத்தால் அந்தப் பாம்பு விறகுகளின் நடுவில் இருந்துள்ளது, அந்த விறகுகளைப் பவுல் நெருப்புக்காக பொறுக்கி எடுத்திருந்தார். நெருப்பின் வெப்பமானது அந்தப் பாம்பை உயிர்ப்பித்தது, அது பவுலை கொத்தியிருந்தது. இப்பொழுது அது அவரது கைகளில் இருந்து வினோதமாய்த் தொங்கியது, அதன் நச்சுப் பற்கள் அவரது சதைக்குள் புதைந்திருந்தன.[8]

*பாட்டியார் என் காதுகளில் இரகசியமாக, "நீ இருக்க விரும்பாத இடத்தில் இருப்பதைக் காணும்பொழுது, சில வேளைகளில் விஷயங்கள் சிறந்ததாகுமுன்பு அவை முதலில் மிகவும் மோசம் அடைகின்றன" என்று கூறுகின்றார். அவர்கள் எதை அர்த்தப்படுத்தினார்கள் என்பதை நான் அறிந்தேன். அநேகமாக நீங்களும் கூட அறிந்திருப்பீர்கள்.*

*நெருப்பைச் சுற்றிலும் முறுமுறுத்தல் ஏற்படுகையில், பவுலின் சூழ்நிலை மிக மோசமாகுவதை நாங்கள் காணுகின்றோம். அந்தத் தீவார் நாகரிகம் உடையவர்கள் தான், ஆனால் புறதெய்வ வழிப்பாட்டுச் சிந்தனையினால் அவர்கள் மூட நம்பிக்கைகளைப் பற்றியிருக்கின்றார்கள். பவுலின் கையில் இருந்து அந்தப் பிராணி தொங்கியதை அந்தத் தீவார் பார்த்த பொழுது, அவர்கள் ஒருவருக்கொருவர், "இந்த மனுஷன் கொலை பாதகன், இதற்குச் சந்தேகமில்லை; இவன்*

சமுத்திரத்துக்குத் தப்பி வந்தும், பழியானது இவனைப் பிழைக்கவொட்டவில்லை" (வ. 4) என்று கூறிக்கொண்டிருந் தார்கள்.

பவுல் ஒரு கைதி என்பதை அவர்கள் எப்படியோ அறிந் திருந்தார்கள்.[9] அவர் கடிக்கப்பட்டிருந்ததை அவர்கள் பார்த்த பொழுது, அவர் கொடிய குற்றம் செய்த குற்றவாளியாய் இருக்க வேண்டும் என்று அவர்கள் முடிவு செய்து, அவர் தண்டனையின்றித் தப்பிவிடாதபடி தேவர்களின் கருவியாக சாவுக்கேதுவான அந்தப் பாம்பானது செயல்பட்டது என்றும் முடிவு செய்தார்கள்.

நான் பவுலை உற்றுப் பார்த்து பயமடைந்தேன். விஷமோ, விஷமில்லையோ, பாம்புகளை நான் விரும்புவதில்லை! அவைகளில் ஒன்று என்னைக் கடித்தால், எனது நரம்புகளின் வழியே அட்ரீனலின் சுரப்பி நீர் அதிகம் பாய்வதால், எனது உடலில் விஷம் பாய்ச்சப்பட்ட நிலையில் நான் மிகுந்த மயக்கமடைந்து, துவளுவேன். அதிசயிக்கத் தக்க வகையில் பவுல் தமது கைகளில் இருந்த அந்தப் பாம்பை நெருப்பில் உதறி விட்டு அமைதியாய் இருந்தார் (வ. 5அ).

இயேசு எழுபது பேரை அனுப்பியபோது, அவர் அவர்களி டத்தில், "இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், ... உங்களுக்கு அதிகாரங் கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்த மாட்டாது" (லூக். 10:19) என்று கூறினார். அவர் பிரதான கட்டளையைக் கொடுத்த போது, தமது அப்போஸ் தலர்களிடத்தில் "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே ... சர்ப்பங்களை எடுப்பார்கள்" (மாற். 16:17, 18அ) என்று வாக்குத்தத்தம் செய்திருந்தார்.[10] "உண்மை அப்போஸ்தலர் ஒருவரின் அடையாளங்களை" (2 கொரி. 12:12அ) மட்டுமே பவுல் நிகழ்த்திக் கொண்டிருந்தார்.

இவ்விதமாகப் பவுல் "ஒரு தீங்கும் அடையாமல்" (வ. 5ஆ) இருக்கின்றார், ஆனால் அந்தத் தீவாரோ அவர் எந்த நேரத்திலும் "வீக்கங்கண்டு[11] அல்லது சடிதியாய் விழுந்து சாவான்" (வ. 6அ)[12] என்று இன்னும் நம்புகின்றார்கள். "நெடு நேரமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தும், ஒரு சேதமும் அவருக்கு வராததைக் கண்ட போது, வேறு சிந்தையாகி, இவன் தேவனென்று சொல்லிக் கொண்டார்கள்" (வ. 6ஆ).

*மக்கள் ஒரு கோடியில் இருந்து மறுகோடிக்குப் பாய்வதில் நாட்டமாய் இருக்கின்றார்கள்! மெக்கார்வி அவர்கள் இதனை* "Lystra reversed" *என்று அழைத்தார். இருந்தாலும் இந்த நிகழ்ச்சியில் பவுல் "நானும் உங்களைப் போன்ற பாடுள்ள மனுஷன்தான்!" என்று சத்தமிடவில்லை (14:15ஐக் காணவும்) - லீஸ்திராவில் நடந்தது போல இங்கு அவரை வழிபடுவதற்கு முயற்சிகள் எதுவும் நடைபெறாததே அவர் இவ்வாறு செய்யாததற்கு காரணமாய் இருந்திருக்கலாம். மக்கள் தம்மைத் தேவனென்றோ அல்லது கொலைகாரன் என்றோ, எப்படிக் கூறினாலும் பவுல் கலக்கமடையாது நிலைத்து நின்றார்.*

*சாவுக்கேதுவான இந்த விரியன் பாம்பு பவுல் ரோமாபுரி சென்று சேர்வதில் இருந்து தடை செய்யச் சாத்தான் பயன் படுத்திய கடைசியான ஆயுதமாக இருந்திருக்கலாம்; "பழைய பாம்பாகிய வலுசர்ப்பமானது" (வெளி. 12:9) தனது நோக்கங் களை நிறைவேற்ற இதற்கு முன்பே ஒரு பாம்பைப் பயன்படுத்தியிருந்தான் (ஆதியாகமம் 3). இருந்தாலும் தேவன் இந்நிகழ்ச்சியைத் தமது சொந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டார். கப்பலில் இருந்த எல்லாருக்கும் அவர், ''பவுல் தேவனால் கொடுக்கப்பட்ட செய்தியுடன் இருந்த, பரலோகத்தினால் இயக்கப்பட்ட ஒரு மனிதராகவே இருந்ததும் இன்றி, அவர் பரலோகத்தினால் பாதுகாக்கப்பட்ட ஒரு மனிதராகவும் இருந்தார்''[13] என்று செயல் விளக்கப் படுத்துகின்றார்.*

*பாட்டியார் பேச முடிவதற்கு முன்பே நான் தயாராக இருக்கிறேன்: "இது தேவன் நம்மைப் பராமரிப்பார் என்பதைக் காட்டுகின்றது." அவர்கள் புன்முறுவல் பூத்தார்கள். "அது உண்மையே ஆகும் ஆயினும் பவுலைப் பாதுகாத்த அதே வழிமுறையில் அவர் நம்மையும் பராமரிக்கிறார் என்று நாம் கருதத் தேவையில்லை - ஆனால் பவுல் அச்சூழ்நிலையை எவ்விதம் கையாண்டார் என்று நீ காண வேண்டுமென்று நான் விரும்புகின்றேன். அது ஒரு பாம்புக் கடியாகவோ, அழகற்ற வார்த்தைகளாகவோ அல்லது தவறான குறிப்பாகவோ எதுவாக இருந்தாலும் அவர் மனமுடைந்து போகவில்லை. நீ இருக்க விரும்பாத இடத்தில் இருக்கும் போது அதுவே விலைமதிப்பற்ற ஒரு உடைமையாகும்." நான் அவர்களைச் சட்டென்று நோக்கினேன். நேற்று நான் விரும்பியபடி*

*விஷயங்கள் நடக்காத போது நான் கோபமடைந்ததை அவர்கள் பார்த்திருந்தார்களோ? விருப்பமற்ற சூழ்நிலை களைக் கையாளுவது பற்றி நான் கற்றுக் கொள்ள வேண்டியது ஏராளம் உள்ளன!*

## “உதவியை ஏற்றுக் கொள்வதில் கௌரவம் பார்க்காதீர்கள்” *(28:7)*

தேவனுடைய அருளிரக்கத்தினால், பவுலும் மற்றவர்களும் கரையேறிய இடமானது மெலித்தாத் தீவின் மிக முக்கியமான மனிதருடைய நிலங்களுக்கு அருகான இடமாய் இருந்தது. “தீவுக்கு முதலாளியாகிய புபிலியு என்னும் பேர் கொண்டவனு டைய நிலங்கள் அந்த இடத்திற்குச் சமீபமாயிருந்தது” (வ. 7அ) என்று லூக்கா கூறினார். ‘‘தீவுக்கு முதலாளி’’ என்பது சிறப்பெழுத்துக்களில் எழுதப்பட முடியும், ஏனென்றால் இது “இரு கிரேக்க - ரோமானியப் பதிவுகளில் சரிபார்க்கப்பட்ட மாகாண நிர்வாகியின் பட்டப்பெயராய்”[14] இருந்தது. புபிலியு என்பவர் மெலித்தாத் தீவுக்கு ரோம அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநராய் இருந்தார்.

*அந்தத் தீவாரில் சிலர் நெருப்பை மூட்டிக் கொண்டிருக்கும் வேளையில், மற்றவர்கள் கப்பற்சேதத்தில் தப்பிப் பிழைத்தவர் களுக்கு வீடு வசதி ஏற்பாடு செய்வதற்காகத் தீவுக்குள் வேகமாய் ஓடினார்கள். மற்ற ஏற்பாடுகள் செய்து முடிக்கப் படும் வரை, பவுல், லூக்கா மற்றும் ஒருவேளை மற்றவர் களையும் கூட ஆளுநர் புபிலியு தம் வீட்டிற்கு வரவேற்றதன் மூலம் உபசரிப்புக்கு நல்லதொரு எடுத்துக்காட்டை வடிவமைக் கின்றார். அவர்களை ஆளுநர் வரவேற்று, அன்புடன் உபசரிக்கின்றார் (வ. 7ஆ). இவ்விதமாகக் காட்சியானது புயலால் கழுவப்பட்ட கடற்கரையில் இருந்து ஆளுநரின் இல்லத்தில் வசதியான ஒரு அறைக்கு மாறுகின்றது.*

*பாட்டியார் தமது சால்வையில் இருந்த தண்ணீரை உதறிக் கொண்டே, ‘‘இது ஏறக்குறைய இப்படித்தான்!’’ என்று கூறுகின்றார்கள். அவர்கள் என்னை நோக்கி விட்டு மறுபடியும், “பல வாரங்கள் கழிந்த பின்பு முதன்முறையாகப் பவுல் சூடான உணவை அங்கு புபிலியுவுடன் சேர்ந்து உண்ணுவதைப் பார்!*

*பிறகு இதைக் கவனி: பவுல் உறுதியான சித்தமும், சுதந்திரத் தன்மையும் உள்ளவராய் இருந்தும் கூட, அவர் உதவியை ஏற்றுக் கொள்ளச் சித்தமுள்ளவராகவே இன்னமும் காணப் படுகின்றார். தீவாரின் தீயின் அருகில் அவர் தம்மை வெது வெதுப்பாக்கிக் கொண்டார், இப்பொழுது ஆளுநரின் உபசரிப்பை அவர் ஏற்றுக் கொள்ளுகின்றார். நீ இருக்க விரும்பாத இடத்தில் நீ இருக்கக் காணும் பொழுது, அறை கூவலைச் சந்திக்க உனக்கு உதவி தேவைப்படலாம். உதவியை ஏற்றுக்கொள்வதில் கௌரவம் பார்க்காதே" என்று கூறுகின் றார்கள்.*

*நான் அறிந்துள்ள யாவரிலும் பாட்டியார் மிகவும் சுய சார்புடையவரானதால் இந்த ஆலோசனைக் கேட்ட போது நான் புன்முறுவல் பூக்க வேண்டியதாயிற்று - ஆனால் அவர்கள் எதை அர்த்தப்படுத்துகின்றார்கள் என்பதை நான் அறிகின் றேன். எந்த ஒரு பிரச்சனையையும் நானே தீர்த்துக் கொள்ள முடியாது என்று ஒப்புக் கொள்வதை நான் விரும்புவதில்லை. சுய சார்புடைமை என்பது மோசமானதாகும் என்பது அவசியமல்ல; உலகத்தில் பல மனிதர்கள் மற்றவர்களின் முயற்சிகளின்றியே வாழ்வதில் மகிழ்ச்சியடைகின்றார்கள். இருந்தாலும், என்னால் ஒன்றும் செய்ய முடியாதபோது, மற்றவர்களின் உதவியை ஏற்க மறுப்பது என்பது மதியீனமானதாகும்.*[15]

## "மற்றவர்களுக்கு உதவுவதில் சுயமையம் கொண்டிராதிருங்கள்" *(28:8)*

*விருந்து மேசையில் நடக்கும் உரையாடலை நாங்கள் கவனிக்க முடிவதற்காக இன்னும் அதிகமாய் நாங்கள் நெருங்கிச் செல்லுகின்றோம். புயல் மற்றும் கப்பற்சேதத்தைப் பற்றிப் பவுல் நாடக பணியில் பேசி, விருந்தினர்களை மயக்குவார் என்று நாங்கள் எதிர்பார்க்கலாம். அதற்குப் பதிலாக, அவர் தமக்கு விருந்தளிப்பவர் கூறுவதை அவரது இருதயச் சுமைகளின் அருகாக இருந்து கவனமாய்க் கேட்டுக் கொண்டிருக்கின்றார்.*

*புபிலியுவின் தகப்பன் ஜுரத்தினாலும் இரத்த பேதியி னாலும்[16] வருத்தப்பட்டுக் கிடந்ததை அந்த அப்போஸ்தலர் அறிகின்றார் (வ. 8அ). பவுல் உடனே மேசையை விட்டு விரைவாக எழுந்து அவரைக் காணச் செல்லுகின்றார் (வ. 8ஆ). துன்புறும் மனிதரைக் கண்டு, முழங்காலில் இருந்து ஜெபம் செய்து, தேவனுடைய உதவியை வேண்டுகின்றார். தேவன் அம்மனிதரைச் சுகப்படுத்த விரும்புகிறார் என்று நம்பிய அவர், அம்மனிதரின் மீது தம் கரங்களை வைக்கின்றார்,[17] அவரைக் குணப்படுத்துகின்றார் (வ. 8இ). அவர் புபிலியுவையும் அவர் குடும்பத்தாரையும் அழைக்கின்றார் (9:41ஐக் காணவும்). அந்த வீட்டார் எவ்வளவாய் அகமகிழ்ந்திருக்கிறார்கள்!*

*பாட்டியார் கண்ணீரைத் துடைத்துக் கொள்ளுகின்றார். அந்த முதியவர்மேல் பவுலுக்கிருக்கும் அன்பான அக்கறை யினால் பாட்டியாரின் இருதயம் நெகிழ்ந்திருக்கின்றது என்பது தெளிவு. அவர்கள் என்னிடத்தில், "பவுல் எப்படி இரக்கத் திற்குப் பதில் இரக்கம் செய்தார் என்று பார்த்தாயா?" என்று கேட்கின்றார்கள். நான் தலையை அசைக்கின்றேன். அவர்கள் தொடர்ந்து "பவுல் தாம் இருக்க விரும்பாத இடத்தில் தாம் இருக்கக் கண்ட பொழுது, சுய இரக்கத்தினால் அவர் விழுங்கப் படவில்லை, அவர் தம்மையே தனிமைப்படுத்திக் கொள்ள வில்லை. அதற்குப் பதிலாக, அவர் இன்னொரு தனி நபரிடம் சென்றடைந்தார். யாரோ வேறொருவருக்காக அக்கறைப் படுவது என்பது சுய பரிதாபத்தைக் குணப்படுத்தும் சிறந்த வழிகளில் ஒன்று ஆகும்" என்று கூறுகின்றார்கள். மறுபடியும் நான் தலையை அசைக்கின்றேன். அவர்கள் கூறுவது உண்மை யென்று நான் அறிகின்றேன். மேலும், சுயசார்புத் தன்மை யானது சுயமையம் உடையதாய் ஆகிவிட முடியும் என்பதை யும் நான் அறிகின்றேன் - ஏனென்றால் எனக்குள் நான் அதை அனுபவித்துள்ளேன், மற்றவர்களிடத்திலும் நான் அதைக் கண்டிருக்கின்றேன். கன்னங்கள் எரிய நான் "தேவனே, மற்றவர்களின் தேவைகள் பற்றி நான் அதிகமாய் உணர் வடைய எனக்கு உதவும்" என்று ஜெபிக்கிறேன்.*

## “தேவன் ஒரு காரணத்தைக் கொண்டுள்ளார்” (28:9)

*அற்புத சுகம் பற்றிய செய்தியானது அந்தச் சிறு தீவு முழுவதும் பரவுதற்கு அதிக நேரம் ஆகவில்லை. விரைவிலேயே அந்தத் தீவில் இருந்த வியாதிப்பட்ட மற்றவர்கள் அவரிடத்தில் வந்து சுகம் பெறுகின்றார்கள் (வ. 9).*[18]

வசனம் 9ல் உள்ள (ஆங்கிலத்தில்) “to him” (அவனிடத்தில்) என்ற வார்த்தைகள் கிரேக்க மொழியில் (மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பில்) காணப்படவில்லை. மூல வசனத்தில் ‘‘மற்ற வியாதிக்காரரும் வந்து குணமாக்கப்பட்டார்கள்’’ என்றுதான் உள்ளது (KJV மற்றும் தமிழ் வேதாகமத்தில் இப்படியே உள்ளது). வசனம் 9ல் “குணமாக்கப்பட்டார்கள்” என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது, வசனம் 8ல் ‘‘குணமாக்கினான்’’ என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையிலிருந்து மாறுபட்டதாயிருக்கின்றது. வசனம் 9ல் “குணமாக்கப்பட்டார்கள்” என்ற வார்த்தையானது “மருத்துவ சிகிச்சை பெற்றார்கள்” என்று அர்த்தப்பட முடியும்.[19] தீவாரால் கனப்படுத்தப்பட்டவர்களில் லூக்காவும் இருந்தார் என்று உண்மையுடன் இவை யாவும் இணைந்துள்ளன (வ. 10). இது பவுலுடன் லூக்காவும் ஊழியம் செய்தார் என்று யூகிக்கும்படி வழி நடத்துகின்றது: லூக்கா தமது மருந்துகளுடனும், பவுல் தமது அற்புதங்களுடனும் ஊழியம் செய்தார்கள். இவ்வசனப் பகுதியானது, “மருத்துவ ஊழியம் செய்யும் பணி பற்றிய ஆதிச் சித்தரிப்பு ஆகும்’’ என்று பார்க்ளே அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இருந்தாலும் நாம், மெலித்தா தீவில் பவுல் இருந்த மூன்று மாதங்களில் அவர் செய்த ஊழியத்திற்கு நமது கவனத்தைத் திருப்புவோம். பவுல் பிரசங்கித்தார் என்று லூக்கா குறிப்பிட வில்லை, ஆனாலும் பவுல் பிரசங்கியாமல் இருந்தார் என்று கற்பனை செய்வது மிகவும் கடினமானது ஆகும். பவுல் தேவனுக்காகப் பேசுபவர் என்றும், அவர்களின் உயிர்களைக் காத்தவர் என்றும் கப்பலில் இருந்து வந்தவர்களுக்குச் செயல் விளக்கப் படுத்தியதன் மூலம் தேவன் அவர்களின் இருதயங் களை ஆயத்தம் செய்திருந்தார்; தேவன் பவுலைப் பாம்பிடம் இருந்து காத்ததன் மூலமும், அவருக்குக் குணமளிக்கும் வல்ல

மையைக் கொடுத்ததன் மூலமாகவும் தீவில் இருந்தவர்களின் இருதயங்களை ஆயத்தம் செய்திருந்தார். தேவன் ஒரு பொழுதும் எந்த ஒரு வாய்ப்பையும் வீணாக்குவதில்லை! பவுல் குணப்படுத்திய போது, அதை இயேசுவின் நாமத்தினாலேயே செய்தார் (19:13); உடல் ரீதியாக அவர்களைக் குணப்படுத்திய இயேசு ஆவிக்குரிய வகையிலும் அவர்களைக் குணப்படுத்த முடியும் என்று கூறுவது எவ்வளவு இயல்பானது![20] மெலித்தாத் தீவில் பவுல் நற்செய்தி ஊழியம் செய்தார் என்றும், அவர் அங்கிருந்து சென்ற பொழுது, புபிலியுவின் வீட்டில் சபை கூடி வந்தது என்றும் ஏவுதல் பெற்றிராத பாரம்பரிய வரலாறு கூறுகின்றது. நான் இந்தப் பாரம்பரிய வரலாற்றின் முதல் பகுதியை மட்டுமாவது நம்பத் தலைப்படுகின்றேன்.[21] ஒருவேளை பவுல் கப்பலில் இருந்த சிலரையும் (நற்செய்தியின் மூலம்) அடையக் கூடியிருந்திருக்கும். ரோமாபுரியில்[22] தண்டனையைப் பெறப் போகும் கைதிகள் சிலர் தங்கள் விதியைத் தங்கள் இருதயங்களில் நம்பிக்கையோடு எதிர் கொள்ளச் சென்றார்கள் என்று நினைக்க நான் சிறப்பாக விரும்புகின்றேன்.

*"பவுல் தாம் இருக்க விரும்பிய இடத்தில் இல்லாதிருந் தாலும், கர்த்தருக்கென்று அர்த்தம் நிறைந்த ஊழியத்தைக் கண்டார்" என்று நான் முடிவாகக் கூறுகின்றேன். "மற்றும்?" என்று பாட்டியார் எனக்குச் சொல்லடி கொடுக்கின்றார். நான், ''மற்றும், நாமும் அது போல் செய்ய முடியும்'' என்று தொடர்ந்து கூறுகின்றேன். பின்வரும் கூற்றை நான் விரும்பு கின்றேன்: "நீங்கள் விரும்பும் இடத்தில் எப்பொழுதுமே நீங்கள் இருக்க முடியாது, ஆனால் நீங்கள் தேவனுடைய சித்தத்தின் படியிருந்தால், நீங்கள் எங்கு இருக்கத் தேவையோ அங்கேயே எப்பொழுதும் இருப்பீர்கள்.''[23] இன்னொரு சொல்லடி: "எனவே?" நான், "எனவே, நாம் இருக்க விரும்பாத இடத்தில் நாம் இருக்கக் காணும் பொழுது, தேவன் எப்பொழுதும் ஒரு காரணம் கொண்டுள்ளார் என்பதை நாம் நினைவு கூர வேண்டியது அவசியமாகும், மற்றும் தேவன் ஏன் நம்மை அங்கு வைத்துள்ளார் என்பதையும் கண்டறிய நாம் முயற்சி செய்ய வேண்டும். நாம் இருக்க விரும்பும் இடத்தைக் காட்டிலும், நாம் இருக்கத் திட்டமிடாத இடத்தில் தேவன் அதிக அர்த்தம் நிறைந்த ஊழியத்தை நமக்காகத் தமது சித்தத்தில் கொண்டிருப்*

பதற்குச் சாத்தியக்கூறு உள்ளது" என்று கூடுதலாய்க் கூறுகின் றேன். இரண்டு நீளமான வாக்கியங்கள் என்னை மூச்சற்றுப் போகவும், பாட்டியாரைப் புன்முறுவல் பூக்கவும் செய்கின்றன. அவர்கள் "மிகவும் நன்று" என்று கூறுகின்றார்கள்.

## "தேவன் உங்களைப் பராமரிப்பார்" (28:10, 11)

மெலித்தாவில் மூன்று மாதங்கள் விரைவாகக் கடந்து சென்றன. "அவர்கள் எங்களுக்கு அநேக மரியாதை செய்து" (வ. 10அ) என்று லூக்கா பதிவு செய்தார். இங்கு பயன்படுத்தப் பட்டுள்ள கிரேக்க வார்த்தைகள் "மதிப்பூதியங்கள்" என்பவற்றைக் குறிக்கக் கூடும், ஆனால் பவுல் தமது உழைப்புகளுக்காக பணத்தை ஏற்றுக் கொண்டிருப்பார் என்று நம்புவது மிகவும் கடினமானது ஆகும். அநேகமாக, பவுலிடத்திலும், இயேசுவைப் பின்பற்றிய மற்றவர்களிடத்திலும் தீவார் கொண்டிருந்த வளரும் மரியாதையை மட்டுமே லூக்கா இங்கு குறிப்பிட்டிருப்பார் (2:42ஐக் காணவும்).

இந்த மாதங்களின்போது, நூற்றுக்கு அதிபதி அலெக்சந்திரியா பட்டணத்தின் இன்னுமொரு தானியக்கப்பலைக் கண்டு பிடித்தார் (28:11), இது மெலித்தாவின் தலைநகரும், முதன்மை நகருமான வாலெட்டாவின் துறைமுகத்தில் மழைக் காலத்திற்காக தங்கியிருந்ததாகும். அந்தக் கப்பல் அவர்களை இத்தாலிக்கு அழைத்துச் செல்வதாய் இருந்தது.

கடைசியாக, பவுலும் அவருடன் இருந்தவர்களும் புறப்பட வேண்டிய நேரம் வந்தது. பவுல் மெலித்தாவுக்கு வந்தபொழுது, அவர் தாம் இருக்க விரும்பிய இடத்தில் இராதிருந்தார்; மூன்று மாதங்களுக்குப் பின்போ, கண்ணீரை அடக்குவது அவரால் முடியாமல் போயிருக்கும். எல்லாரும் புயலில் இழந்து போகப்பட்டிருந்தார்கள்; பவுலும் அவருடன் இருந்தவர்களும் முதலில் அந்தக் கடற்கரையில் தங்களுக்குப் பின்புறம் அழுக்கான கந்தல் உடைகள் தவிர வேறு எதுவுமின்றி நின்றிருந்தார்கள். இப்பொழுதோ, அவர்களின் புதிய நண்பர்கள், அவருக்கும் அவரது கப்பல் நண்பர்களுக்கும் அவர்கள் ரோமாபுரிப் பயணத்தை முடிக்கத் தேவையான எல்லாவற்றையும்

கொடுத்திருந்தார்கள். பிரிவு உபசார நிகழ்ச்சியை லூக்கா ஒரே ஒரு தெளிவான வாக்கியத்தில் சித்தரித்தார்: "நாங்கள் கப்பல் ஏறிப் போகிறபோது எங்களுக்குத் தேவையானவைகளை ஏற்றினார்கள்" (வ. 10ஆ).

*எங்களின் பாட வேளையை எனது பாட்டியார் முடித்து வைப்பதற்காக நான் காத்திருக்கின்றேன். "நீ இதை முடித்து வை" என்று பாட்டியார் கூறி என்னைத் திகைப்படையச் செய்கின்றார். பவுலையும் லூக்காவையும் சுற்றி முழங்காலில் நிற்கும் கூட்டத்தை (21:5ஐக் காணவும்) அவர்கள் எனக்குச் சுட்டிக்காட்டி, "அதிலிருந்து நீ என்ன கற்கின்றாய்?" என்று கேட்கின்றார்கள். நான் எனது சிந்தனையைச் சேகரித்துக் கொண்டு, எனது விரல்களால் எண்ணத் தொடங்குகின்றேன்: "(1) நீங்கள் நல்லதொரு எண்ணப் போக்கைக் கொண்டிருந் தால், நீங்கள் இருக்க விரும்பாத இடத்தில் இருப்பதென்பது மிகவும் மோசமானதாக ஆகி விடாமல் இருக்கலாமே. (2) நீங்கள் சுறுசுறுப்பாய் இருந்தால், நேரம் விரைவாய்க் கடந்து விடும். (3) உங்களைப் பற்றி நினைப்பதற்குப் பதிலாக நீங்கள் மற்றவர்களைப் பற்றி நினைத்தால், வேறு எவ்வகை யிலும் ஏற்படுத்திக் கொள்ள இயலாத நண்பர்களை நீங்கள் ஏற்படுத்திக் கொள்வீர்கள். (4) நீங்கள் இருக்க விரும்பாத இடத்தில் நீங்கள் இருந்தாலும், தேவனோடு நீங்கள் நெருங்கி யிருந்தால், அவர் நீங்கள் விரும்பும் இடத்தில் இருப்பது போல உங்களை ஆசீர்வதிக்க முடியும்." பாட்டியாரின் முகத்தில் பெரிய சிரிப்பொன்று தவழ்கின்றது. "டேவிட் இதைக் காத்துக் கொள், ஒருநாளில் நீ பிரசங்கியார் ஆகி விடுவாய்."*

உற்சாகம் தரும் அந்த வார்த்தையுடன் நான் இந்த நேரத்திற் குப் பாட்டியார் ரோப்பரிடம் "பிரியா விடை" சொல்லிக் கொண்டேன். அவர்கள் என்னிடம் பேசுகையில் அதை நீங்கள் கவனித்திருப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன்; உங்கள் சொந்த வாழ்க்கைக்கு இதை நீங்கள் நடைமுறைப் படுத்தும்படி ஜெபிக்கின்றேன்.

## முடிவுரை

விரைவிலேயோ அல்லது தாமதமாகவோ, நீங்கள் இருக்க விரும்பாத இடத்தில் நீங்கள் இருக்கக் காண்பீர்கள்.

*அப்பொழுது, உங்கள் சூழ்நிலையில் மிகச் சிறந்தவற்றைச் செய்யவும், தேவனில் நம்பிக்கை கொள்ளவும் தேவன் உங்களுக்கு உதவுவாராக!*

*நாம் பேசுகின்ற இவ்விடமானது நீங்கள் கட்டுப்படுத்தக் கூடிய அல்லது கட்டுப்படுத்த முடியாத இடம் (அல்லது சூழ்நிலை அல்லது நிலைமை) ஆகும். இருந்தாலும் சில வேளைகளில் நீங்கள் இருக்க விரும்பாத இடத்தில் இருக்கக் கண்டும், அதைப் பற்றி உங்களால் ஏதேனும் செய்ய முடிவதாக இருக்கலாம். அப்படி இருக்கும் பொழுது, சிடுசிடுக்கவோ, முறையிடவோ வேண்டாம், ஆனால் என்ன செய்யப்பட தேவையோ அதைச் செய்யுங்கள்!*

*தேவனை விட்டு விலகியிருத்தல் என்பதே நீங்கள் இருக்கக் கூடிய மிகப் பயங்கரமான இடம் ஆகும் (ஏசா. 59:1, 2). நீங்கள் இருக்கக் கூடாத நிலை இதுவேயாகும், ஏனென்றால் அங்கிருந்து நீங்கள் இறந்தால், நரக அக்கினியில் உங்கள் வாழ்க்கை முடியும், அது நீங்கள் இருக்க விரும்பாத ஒரு இடமாயிருக்கும் - ஆனால் அப்பொழுது தேவனிடத்தில் திரும்ப முடியாதபடி மிகவும் தாமதமாகி விடும்! இந்தச் சூழ்நிலை யொன்றைக் குறித்து நீங்கள் ஏதேனும் செய்ய முடியும் என்பதே நற்செய்தியாகும் - அது நீங்கள் நீண்ட காலம் காத்திருக்க விரும்பாதிருந்தால் மட்டுமே நடக்கும். ஆவிக்குரிய வகையில் நீங்கள் இருக்க விரும்பாத இடத்தில் நீங்கள் இருக்கக் கண்டால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்? கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, அவரிடமாய்த் திரும்புங்கள்.[24] அவர் உங்களை விடுதலையாக்க முடியும், விடுதலையாக்குவார்!*

## பிரசங்கக் குறிப்புகள்

*மெலித்தாத் தீவில் பவுலின் கப்பற் சேத வரலாறானது "சில மனிதர்கள் அந்நியர் ஒருவருக்கு இரக்கம் காட்டுகின்றார்கள்" என்று தலைப்பிடப்படக் கூடும், இது குழந்தைகளின் வகுப்பில் மிகவும் பிரியமான வரலாறாக இருக்கும். இந்த வேத வசனத்தின் அடிப்படையில், "உபசரிப்பு என்ற நுண்கலை"*

*என்ற தலைப்பில் துணைக்கட்டுரையொன்று இன்றைக்கான சத்தியத்தின் அடுத்த இதழில் வெளியாகும்.*

---

*குறிப்புகள்*

[1]*இப்பாடத்தில் தரப்பட்டுள்ள அறிவுரைத் துணுக்குகள் யாவும், நாம் நம்மைப் பற்றி வருத்தப்படும் பொழுது தேவ பயமுள்ள பாட்டியார் நமக்குக் கூறக் கூடிய ஞானமுள்ள சொற்களாய் என்னை நினைக்கச் செய்கின்றன.* [2]*கடைசி இரு வாக்கியங்களின் வார்த்தையமைப்புகள் சார்லஸ்* R. *ஸ்விண்டல் அவர்களின்* "The Strength of an Exacting Passion," *என்ற நூலில் இருந்து தழுவப்பட்டவையாகும்.* [3]Rick Atchley, "Stuck on a Deserved Island", *என்ற பிரசங்கத்திலிருந்து.* [4]"Roller Coaster" *என்பது பொழுது போக்குப் பூங்காக்களில் வைக்கப்படும் ஒரு சாதனம் ஆகும். இது மலைகள் மீதும், வளைவுகளைச் சுற்றியும் அதிவேகமாக ஓடும்.* [5]Swindoll, *கூறியுள்ளார்.* [6]William Barclay, *The Acts of the Apostles*, The Daily Study Bible Series, rev. ed. (Philadelphia: Westminster Press, 1976), 187. [7]Richard N. Longenecker, "The Acts of the Apostles," *The Expositor's Bible Commentary*, ed. Frank E. Gaebelein, vol. 9 (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1981), 563. *(இந்நாட்களில் மால்த்தா தீவில் உள்ள மக்கள் தொகையில் 96 சதவிகிதம் பேர் படிப்பறிவு பெற்றவர்கள் ஆவார்கள். இது உலகின் மிக அதிக பட்ச சதவிகிதத்தில் ஒன்றாகும்.)* [8]*பாம்பு நிகழ்ச்சியொன்று நடந்திருக்கலாம் என்று ஒத்துக் கொள்ளும் சில தேவபக்தியற்றவர்கள், அது உண்மை யில் பவுலைக் கடித்திருக்காது என்கின்றனர். பிறகு எப்படி அந்த விரியன் பாம்பு பவுலின் கையில் இருந்து தொங்கியது? விரியன் பாம்புகள் தங்களைச் சுருட்டிக் கொள்ள மாட்டாது, பிடித்துத் தொங்குவதற்கு அவற்றுக்குக் கைகளும் இல்லை. விரியன் பாம்பின் நச்சுப் பற்கள் சதையில் பதிந்தால் அவை கையில் இருந்து தொங்க முடியும்.* [9]*ஒருவேளை பவுலின் கைகளில் விலங்கிடப்பட்டிருக்கலாம் (பவுல் கடலில் குதிப்பதற்கு முன்பு நிச்சயமாக அது அகற்றப்பட்டிருக்க வேண்டும்). தப்பிப் பிழைத்த மற்றவர்களிடத்திலிருந்து அந்தத் தீவார் பவுல் ஒரு கைதி என்று அறிந்திருக்கலாம். இருந்தாலும் அவர் மீது சாட்டப்பட்ட குறிப்பான குற்றம் என்னவென்று அவர்கள் அறியாதிருந்தார்கள்.* [10]*தீங்கு எதுவுமின்றி "சர்ப்பங்களைக் கையில் எடுப்பது" என்ற வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றமாய்க் காணப்படுவது இந்த ஒரு எடுத்துக்காட்டு மட்டுமேயாகும் - இதுவும் தற்செயலானதே, வேண்டுமென்றே செய்யப்பட்டதல்ல. இந்நாட்களில் பாம்புகளைக் கையாளும் மார்க்கம் என்பது வசனங்களைத் தவறாகப் பயன்படுத்தி, தேவனைச் சோதிக்கும் மார்க்கம் ஆகும் (மத். 4:7), இவர்கள் தங்கள் உடல்களை அநாவசியமான இடர்ப்பாட்டிற்குள்ளாக்கு கின்றனர் (1 கொரி. 3:17).*

[11]*"வீக்கம் கண்டு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை லூக்காவால் பயன்படுத்தப்பட்ட இன்னுமொரு மருத்துவச் சொற்றொடர் ஆகும். "விஷமுள்ள பாம்பொன்று கடிக்கும் பொழுது, அதன் விஷம் இரத்த ஓட்டத்தில் நுழைந்து, இரத்தக் குழாய்களை உடைக்கின்றது, அதனால் மிகப் பலத்த அளவில் உள்ளான இரத்தச் சிதைவு உண்டாகின்றது. பாதிக்கப்பட்ட பகுதி வீங்குகின்றது, மற்றும் விஷமானது போதிய அளவு வீரியமுள்ளதாய் இருந்தால், கடிபட்டவர் உடனடியாக இறக்கின்றார்"* (Simon J. Kistemaker, *New Testament Commentary: Exposition of the Acts of the Apostles* [Grand Rapids, Mich.: Baker Book House, 1990], 949). [12]*பவுலைப் பாம்பு கடித்தது என்று ஒப்புக் கொள்ளும் தேவபக்தியற்ற சிலர், அது விஷமற்ற பாம்பு என்கின்றனர். அப்பகுதியைப் பற்றி நன்கறிந்த அந்தத் தீவார்*

*அந்தப் பாம்பு சாவுக்கேதுவான விஷமுள்ள உயிரினமாகும் என்று அறிந்திருந்தனர். வேதாகமத்தின் அற்புதங்களை நம்புவதில்லை என்று நாம் முடிவு செய்தாலன்றி, எந்த அடிப்படையில் அவர்களின் முடிவை நாம் மறுக்க முடியும்?* [13]Longenecker. [14]Richard Oster, *The Acts of the Apostles,* Part 2, The Living Word Commentary Series (Austin, Tex.: Sweet Publishing Co., 1979), 174. [15]*சில வேளைகளில் உறவொன்றை நிலைநாட்டி பெலப்படுத்திக் கொள்வதற்கு நாமும் கூட உதவியை ஏற்றுக் கொள்வது அவசியமாகின்றது.* [16]*கிரேக்க வசனத்தில் இவ்விடத்தில் dusenteria என்றுள்ளது. இவ்வார்த்தையில் இருந்துதான் நாம்* "dysentery" *என்ற வார்த்தையைப் பெறுகின்றோம். இது, லூக்காவின் மருத்துவச் சொற்றொடருக்கான இன்னொரு எடுத்துக்காட்டு ஆகும். முதலாளியின் தகப்பனார் மெலித்தா காய்ச்சல் உடையவராய் இருந்திருக்கலாம். இது இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு நீடித்து பலவீனப்படுத்தும் வியாதியாகும். (மெலித்தா காய்ச்சல் என்பது மெலித்தா தீவின் வெள்ளாட்டுப் பாலில் உள்ள நுண்கிருமியினால் ஏற்படக் கூடியதென்று 1887ல் கண்டு பிடிக்கப்பட்டது. உலகின் பல்வேறு பகுதிகளில் இவ்வியாதி பல்வேறு பெயர்களால் அழைப்படுகின்றது,* brucellosis *என்பது இதன் அறிவியல் பெயராகும். இவ்வியாதி, "குளிர், காய்ச்சல், எடை இழப்பு, மூட்டு மற்றும் தசை வலி மற்றும் மண்ணீரல் வீக்கம் ஆகியவற்றை உண்டாக்குகின்றது. மூளைக்காய்ச்சல் போன்ற தீவிர வியாதிகளும் இதனால் உண்டாகலாம்"* [*Grolier Multimedia Encyclopedia* (1995), s.v. "Brucellosis," by J. Michal S. Dixon].*)* [17]*தொட்டுக் குணப்படுத்தும் நிகழ்ச்சியென்பது சுவிசேஷ நூல்கள் தவிர, இங்கு ஓரிடத்தில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது; ஒருவேளை இவ்விடத்தில் இது கனிவான பண்பைக் குறிக்கலாம் ("அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 3" இதழில் "கைகளை வைக்குதல்?" என்ற துணைக் கட்டுரையில் காணவும்). புதிய ஏற்பாட்டில் குணப்படுத்துபவர் எவரும் இன்றைய நாட்களில் தங்களை "குணமாக்குபவர்" என்று அழைத்துக் கொள்பவர்கள் செய்வது போல மக்களின் தலையில் அடித்ததில்லை என்பது மட்டும் உறுதியானதாகும்.* [18]*பேதுருவின் மாமியாரைக் கப்பர்நகூமில் இயேசு குணப்படுத்திய பிறகு (மாற். 1; லூக். 4) அவ்வார்த்தை பரவியது. இவ்வூழியத்தின் எச்சமாகவே இக்காட்சி உள்ளது. மெலித்தா தீவில் இழந்து போகப்பட்டிருந்தவர்களின் மத்தியில் குணமாக்குதல்கள் நடைபெற்றது, அப்படியில்லையென்றால், இந்த அற்புதங்கள் பவுலைச் சார்ந்ததாயிருக்கும். வார்ரென்* W. *வயர்ஸ்ப் அவர்கள், "குணமாக்கும் வரமும் அற்புதங்களின் வரமும் பவுலின் ஊழியத்தில் படிப்படியாக மறைந்தது. தேவன் பவுலுக்கு எபேசுவில் 'விசேஷித்த அற்புதங்களைக்' கொடுத்தார் (அப். 19), இது புறஜாதியாருக்குச் சாட்சியாக இருந்தது; மற்றும் மெலித்தாவில் தேவன் பவுலுக்கு குணமாக்கும் வல்லமையைக் கொடுத்தார். இருப்பினும், இரு ஆண்டுகளுக்குப் பிறகு ரோமாபுரியில் இருந்து பவுல் எழுதும் போது, எப்பாப்பிரோதீத்து வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாய் இருந்ததாக அறிவித்தார் (பிலி. 2:25-30); மற்றும் 2 தீமோத்தேயு 4:20ல் துரோப்பீமுவை மிலோத்துவில் வியாதிப்பட்டவராக விட்டு வந்ததாக அவர் கூறினார்" என்று சொன்னார்* (*Wiersbe's Expository Outlines on the New Testament* [Wheaton Ill.: Victor Books, 1992], 355.) [19]Fritz Rienecker, *A Linguistic Key to the Greek New Testament,* ed. Cleon L. Rogers, Jr. (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, Regency Reference Library, 1980), 343. [20]*சுவிசேஷ நூல்கள் மற்றும் நடபடிகள் ஆகியவற்றில் குணமாக்குதல் என்பது ஒருபொழுதும் தனிப்பட்ட ஒரு நிகழ்ச்சியாக இருந்ததில்லை. அற்புதங்கள் தேவனுடைய செய்தியாளரை (இயேசுவை அல்லது அப்போஸ்தலர்களை) உறுதிப்படுத்தின, பிறகு அவர்கள் செய்தியைப் பகிர்ந்து கொண்டனர்.*

[21]"லூக்கா ஒன்றும் குறிப்பிடாததால்" பவுல் மெலித்தா தீவில் மனமாற்றம் எதுவும் செய்யவில்லை என்று சில எழுத்தாளர்கள் முடிவு செய்கின்றனர். இருந்தாலும், ரோமாபுரியில் நடந்த மனமாற்றங்கள் எதையும் கூட லூக்கா குறிப்பிடவில்லை, ஆனால் அத்தலைநகரில் மனமாற்ற நிகழ்ச்சிகள் நடந்தன என்பதை மற்ற எழுத்துக்களில் இருந்து நாம் அறிகிறோம் (பிலி. 1:12, 13; 4:22; பிலே. 10). மெலித்தா அல்லது ரோமாபுரியில் நடைபெற்ற மனமாற்றங்களை லூக்கா குறிப்பிடாதது, அது அவர் நோக்கமல்ல என்பதால் இருக்கலாம். [22]அப். 27:1க்கான குறிப்புகளைக் காணவும். [23]Rick Atchleyயின் பிரசங்கத்திலிருந்து தழுவப்பட்டது. [24]கிறிஸ்தவரல்லாத ஒருவர் இரட்சிக்கப்பட என்ன செய்வது அவசியம் என்பதையும், தேவனுடைய பிள்ளையாயிருந்து, தவறு செய்யும் நபர்கள் மறுபடியும் கூட்டிக் கட்டப்படச் செய்ய வேண்டியது என்ன என்பதையும் கூற இது ஒரு சிறந்த நேரம் ஆகும்.

# ரோமாபுரிக்குப் பவுலின் பயணம்

ரோமச் சேவகர்களால் யூதக் கும்பல் ஒன்றில் இருந்து காக்கப்பட்டிருந்த (அப். 21) பவுல் ❶ எருசலேமில் காவலில் வைக்கப்பட்டிருந்து, பிறகு ❷ செசரியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு பேலிக்ஸ் பவுலின் வழக்கை விசாரித்தும் அதைப் பற்றி முடிவெதுவும் மேற்கொள்ளவில்லை (அப். 24). இரு ஆண்டுகளுக்குப் பிறகு பேலிக்ஸ்ஸுக்குப் பதிலாக பெஸ்து வந்தபோது, பவுல் அவருக்கு முன்பாக மறுபடியும் தமது வழக்கை எடுத்துரைத்தார் (25:1-10). பவுலை யூதர்களிடத்தில் ஒப்படைக்க பெஸ்து முடிவு செய்த பொழுது, பவுல் இராயருக்கு அபயமிட்டார் (25:11). ரோமாபுரிக்கு அழைத்துச் செல்லப்படுவதற்காக அவர் காத்திருந்த காலத்தில் இரண்டாம் அகிரிப்பா அரசரிடத்தில், கிறிஸ்துவுக்காகத் தாம் சிறைப்பட்டிருப்பது பற்றிப் பேசும் வாய்ப்பைப் பவுல் பெற்றிருந்தார் (அப். 26).

பவுலும், (லூக்கா உட்பட) அவரது தோழர்களும் ❸ சீதோனில் இருந்து ஆயுதமேந்திய காவலருடன் ரோமா புரிக்குப் பயணம் தொடங்கினார்கள் (27:1-3). லீசியாவின் மீறா நகரில் அவர்கள் வேறு கப்பல்களுக்கு மாறினார்கள் (27:5, 6). மோசமான வானிலையில், கப்பலானது கிரேத்தாத் தீவின் ❹ நல்ல துறைமுகம் என்ற இடம் சேர்ந்தது, அங்கு - பாது காப்பான பயண காலத்தின் முடிவு காலமான - செப்டம்பர் வரைக்கும் பயணிகள் தங்கியிருந்தார்கள். மழைகாலத்தில் தங்குவதற்காக பேனிக்ஸ் என்ற ஊர் போய்ச் சேர அவர்கள் கிலவுதா தீவின் ஒதுக்கில் பயணம் செய்தார்கள் (27:16); ஆனால் காற்றினால் அவர்கள் கடலில் அடித்துச் செல்லப் பட்டார்கள் (27:17). ❺ கப்பலின் தளவாடங்கள் மற்றும் சரக்குகளைத் தூக்கியெறிந்த பிறகு (27:18, 19) அவர்கள் ❻ மெலித்தா தீவின் கரையோரமாய் ஒதுக்கப்பட்டார்கள் (27:41). கப்பல் அழிந்து போனாலும், கப்பலில் இருந்த யாவரும் காக்கப்பட்டார்கள் (27:44). மெலித்தாவில் பவுல் பாம்புக் கடியொன்றில் உயிர் பிழைத்தார் (28:3-5) மற்றும் அடுத்து வந்த மூன்று மாதங்களின் போது, வியாதிக்காரர்களைக் குணப்படுத் துவதில் நேரத்தைச் செலவிட்டார் (28:8-11). பயணத்திற்கேற்ற நல்ல வானிலை திரும்பிய போது, அந்தக் குழுவினர் சீரகூசா

*நோக்கி புதிய கப்பல் ஒன்றில் பயணம் சென்றார்கள் (28:12). அங்கிருந்து மூன்று நாட்களுக்குப் பின்பு ரேகியு துறைமுகத் திற்கும் மற்றும் ரோமப் பேரரசின் மாபெரும் துறைமுகங்களில் ஒன்றான ❼ புத்தேயோலி நகருக்கும் சென்று சேர்ந்தார்கள். பவுலும் அவரது நண்பர்களும் அங்கிருந்த உள்ளூர்க் கிறிஸ்தவர் களுடன் ஒரு வார காலம் தங்குவதற்கு அனுமதிக்கப் பட்டார்கள். பின்பு ரோமாபுரியை நோக்கி 100 மைல்கள் பயணத்தை மேற்கொண்டார்கள். ❽ வழியில் பெற்ற வரவேற் பினால் பவுல் உற்சாகப்படுத்தப்பட்டார். ❾ ரோமாபுரியில், பவுல் வாடகைக்கு அமர்த்திய வீடு ஒன்றில் காவலர் ஒருவரின் பாதுகாப்பின் கீழ் இரண்டு ஆண்டுகள் வைக்கப்பட்டிருந்தார். அந்த நாட்களில், விருந்தினர்களை ஏற்கவும், பிரசங்கிக்கவும் பவுல் கணிசமான அளவு சுதந்திரம் பெற்றிருந்தார் (28:30, 31).*




ரோமாபுரிக்குப் பவுலின் பயணம்